**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது ஆத எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு

அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவின் கிரயம் ரூபா 20.4 மில்லியனான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களினால், மொத்த பெறுமதி பூரணமாக தேய்விடப்பட்டிருந்த போதும் | மதிப்பீட்டு திணைக்களத்தினால் 2022.02.22 மற்றும் 23 திகதிகளில் அனைத்து சொத்துக்களையும் | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தற்போதும் பயன்படுத்தப்படும் கிரயம் ரூபா 16.7 மில்லியனான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீட்டு தவறு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 3 பிரகாரம் மீள்திருத்தி நிதிக்கூற்றுடன் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீள்மதிப்பிட்டு தற்போது மீள்மதிபீட்டு அறிக்கையை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளது. இம் மீள்மதிப்பீட்டு அறிக்கையை 2022.06.22 திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே இம் மீள்மதிப்பீடு தொடர்பாக 2021 கணக்கறிக்கைகளில் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய நிதி

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளிலிருந்து நிலவிவரும் ரூபா 3,339,400 ஆன செலுத்த வேண்டிய மீதிகளை 2021 திசெம்பர் 31 வரையும் கொடுப்னவு செய்து மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்நிதி முறையான ஒழுக்காற்று நடவடிக்கை, நாம் (NAM) மத்திய நிலையத்திற்கு வழங்கும் வருடாந்த அங்கத்துவ கட்டணம், விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப வருடாந்த மீளாய்விற்காக, ஈராண்டு சம்மேளனத்தின் அறிக்கை ஒன்றிற்காக ஆலோசகர் ஒருவருக்கு செலுத்த என்பதற்காக ஒக்கப்பட்டிருந்தது. தேசிய வரவு செலவு திணைக்ளத்தினால் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படாமை, ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்காமை மற்றும் பட்டியல் சமர்பித்திருக்காத காரணத்தால் இம்மீதியை தீர்த்து முடிவுறுத்த இயலாதிருந்தது. | பதிலளிக்காத மீதிகளை கவனித்து வருமானத்திற்கு சீராக்கம் செய்வதற்கு அல்லது நிலுவையாக உள்ள மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2010 திசெம்பர் 10 திகதிய 01/2010 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் (1)(ஊ) பிரிவு | பொது முயற்சிகளில் உயர் மட்ட பதவியொன்றை வகிக்கும் 12 வருடங்களை பூர்த்தி செய்துள்ள நிறைவேற்று அலுவலர்களுக்காக தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்ள முடியுமென குறிப்பிட்டுள்ள போதும், அதற்கு மாற்றமாக ஆணைக்குழு பணிப்பாளரினால் 2011 ஜுன் 08 திகதி தீர்வை வரியற்ற வாகன அனுமதிப் பத்திரம் மீது வாகனமொன்றை இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவரின் நியமனத் திகதி 2003 ஜுலை 31 ஆனதுடன், தீர்வை வரியற்ற வாகனத்தை இறக்குமதி செய்யும் திகதிக்கு அவரின் சேவைக்காலம் 08 வருடங்கள் மாத்திரமாக இருந்தது. இது தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்வதுடன் அதற்காக ரூபா 1,568,485 செலவிடப்பட்டிருந்த போதும் அவ்விசாரணை நடவடிக்கையை பூர்த்தி செய்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள அல்லது அரசிற்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புவாயந்த அலுவலரிடமிருந்து அறவிட ஏனும் ஆணைக்குழுவிற்கு இயலாதிருந்தது. | இது தொடர்பாக கண்டறிய ஆரம்ப விசாரணையொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் பரிந்துரையை கவனித்து குறித்த அலுவலர் 2020 ஜுலை 01 திகதி சம்பளமின்றி பணித்தடை செய்யப்பட்டதுடன் குற்றப் பத்திரமொன்றும் வழங்கப்பட்டது. ஆரம்ப விசாரணையின் பின்னர் முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் அது முடிவுற்ற பின்னர் முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கையை முடிவுறுத்தி அரசுக்கு நட்டம் ஏதும் ஏற்பட்டிருந்தால் அதை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜுலை 31 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2018 | பதவிநிலை அலுவலர் ஒருவருக்கு எதிராக நடாத்தப்படும் விசாரணையொன்றில் விசாரணை அலுவலரிற்கு | ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் மீது இக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவு நடவடிக்கைகளை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை நடாத்தும் ஒரு மணித்தியாளத்திற்கு படிகள் ரூபா 1,000 என குறிப்பிட்டிருந்த போதும், அவ்விகிதம் தொடர்பில் கவனம் செலுத்தாது சுயாதீன விசாரணை சபைக்கு ரூபா 700,000 உம் ஆரம்ப விசாரணை அலுவலரிற்கு ரூபா 150,000 உம் முறையான ஒழுக்காற்று அலுவலரிற்கு ரூபா 551,800 உமாக கூட்டுத்தொகை ரூபா 1,401,800 செலுத்தப்பட்டிருந்தது. | | மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 5(ஆ) பந்தி | பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் கடந்த வருடம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பணிகள் பற்றி மீளாய்வு மேற்கொண்டு அறிக்கையொன்றை வருடாந்தம் அரசிற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான அறிக்கைகளை 2021 திசெம்பர் கணக்காய்வு திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. | சில நிறுவனங்களால் தரவுகளை வழங்குவது தாமதித்தமையும் 2020 மற்றும் 2021 இல் நாட்டில் நிலவிய COVID-19 தொற்று இந்நிலைமை இந்நிலைமைக்கு தாக்கம் செலுத்தியுள்ளது. அறிக்கைக்கு தேவையான தரவுகளை சேகரித்தல் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுவதுடன் தரவுகளை பகுப்பாய்வு செய்த பின்னர் இறுதி அறிக்கை தயாரிக்கப்படும். | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள மிகவும் பொருத்தமான முறைமையொன்றை தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 5(இ) பந்தி | நிறுவன நோக்கங்களுடன் தொடர்பாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய வேண்டிய போதும் தற்போது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் கீழ் அடங்கும் 66 நிறுவனங்களை இனங்கண்டுள்ளதுடன் 2021 | NASTEC நிறுவனத்தினால் மேற்கொள்ளும் விஞ்ஞான தொழிநுட்ப நிறுவனங்களின் மீளாய்வு செயன்முறையை நாளாதுரையாக்கல் மற்றும் காணப்படும் பிரச்சினைகளை | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள மிகவும் பொருத்தமான முறைமையொன்றை தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திசெம்பர் அளவில் பத்து வருடங்களில் (2010 – 2020 காலத்தினுள்) மீளாய்வை மேற்கொண்டு 22 நிறுவனங்களிற்கு மாத்திரம் அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தன. மதிப்பீட்டு செயன்முறையுடன் தொடர்புடைய வழிகாட்டி பிரகாரம் இவ்வறிக்கைகளில் காணப்படும் பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான பொறுப்பு குறித்த நிறுவனத்திற்கு மற்றும் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அப் பரிந்துரைகளை செயற்படுத்தப்பட்ட போதும், ஏற்றுக் கொள்ளப்பட்டதா அதனால் நலன்கள் கிடைத்தனவா என்பது பற்றி கண்டறிந்து அறிக்கை தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | ஆய்வு செய்து தீர்வு பெற்றுக் கொடுத்தல் மற்றும் குறித்த மீளாய்வை மேற்கொண்ட நிறுவனம் வழங்கிய பரிந்துரைகளை செயற்படுத்தல் மேற்பார்வைக்காக செயன்முறையை ஆரம்பிக்க 2021 ஆண்டில் ஆணைக்குழு உப குழுவொன்றை நிறுவியது. ஆணைக்குழு உப குழுவின் பரிந்துரை மீது இச் செயற்பாடுகளை புதிய தலைவரொருவர் நியமிக்கப்பட்ட பின்னர் வழங்கும் பரிந்துரை மீது மேற்கொள்ளவுள்ளது. | |
| (உ) | 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 5(உ) பந்தி | அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரத்துடன் இலங்கை விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப சம்மேளனத்தை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூட்டுதல், சட்டத்தின் 2 பிரிவில் அறிவித்துள்ள நோக்கங்களுடன் தொடர்பாக இலங்கையின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் அக்கலந்துரையாடல் தொடர்பான அறிக்கையொன்றை அமைச்சரிற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2016 இன் பின்னர் சம்மேளனங்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2021 ஜனவரி மாதம் முதல் இதுவரை சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக காணப்படுவதால் ஆணைக்குழுவின் ஆலோசனை பிரகாரம் குறித்த நடவடிக்கையை ஆரம்பித்தல் இடம்பெறவில்லை. | சட்ட செயற்பாடுளை மேற்கொள்ள நிறவனத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டுக்கான செயற்பாட்டு விளைவு ரூபா 3,711,160 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 2,966,932 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 744,228 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு மீண்டுவரும் நன்கொடை குறைவாக கிடைத்தமை மற்றும் உடன்படிக்கைச் சேவைகளுக்கான செலவினங்கள் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் அளவில் ஆணைக்ககுழுவின் தலைவரை மற்றும் கட்டுப்பாட்டு சபையின் மூன்று உறுபினர்களை நியமித்திருக்கவில்லை. அவ்வாறே பணிப்பாளர் ஒழுக்காற்று நடவடிக்கை மீது பணித்தடைக்கு உற்பட்டிருந்தார். தற்போது பதில் கடமை பணிப்பாளர்ரொருவரின் கீழ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான நிலைமை ஒன்றின் கீழ் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை போன்றே செயற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு செல்ல போறுப்பேற்கும் ஆளணி இல்லாதமை ஆணைக்குழுவின் நோக்கத்தை செயற்திறனாக மேற்கொள்ளுவதற்கு தடையை ஏற்படுத்தியுள்ளதாக கணக்காய்வின் பொது அவதானிக்ககப்பட்டது. | 2021.01.21 மற்றும் 2021.07.19 திகதிகளில் ஆணைக்குழவின் தலைவர் உள்ளிட்ட அங்கத்தவர்களின் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாக அமைச்சின் செயலாளருக்கு அறவூட்டப்பட்டது. | ஆணைக்குழுவை நிறுவுவதன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள தடையாகாதவாறு மேல் முகாமைமத்துவத்தின் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவிக்குரிய கடமைகள் மற்றும் சட்டத்தின் நோக்கங்களை மேற்கொள்வதற்காக 2018 முதல் 2021 ஆண்டு வரை மீண்டெழும் செலவினமாக ரூபா 135,206,078 இனையும் கொள்கைகள் தயாரிப்பது மற்றும் நிறுவன மீளாய்வு செய்து மீளாய்வு அறிக்கை தயாரித்தல் மற்றும் அதற்காக வெளிவாரி நிபுணத்துவ அறிவுள்ள மதிப்பீட்டுக் குழவிற்காக கொடுப்பனவு செய்ய ரூபா 14,472,223 ஆக கூட்டுத்தொகை ரூபா 149,678,301 | 2018 முதல் 2021 ஆண்டு வரையான காலத்தினுள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவர் பதவி மற்றும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினது மாற்றம் மீது மற்றும் 2021 ஆண்டில் ஆயுட்கால தலைவர் ஒருவர் இல்லாத காரணத்தால் வரைபு நிலையில் நிலவிய கொள்கைகள் மற்றும் | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்ள மிகவும் பொருத்தமான முறைமையொன்றை தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவு செய்த போதும் ஆணைக்குழவினால் 2017 – 2021 காலத்தினுள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட 05 கொள்கைகளில் 05 உம் மற்றும் 15 மீளாய்வு அறிக்கைகளில் 06 உம் 2021 ஆண்டு இறுதி வரையும் வரைபு நிலையில் நிலவுவதாக அவதானிக்கப்ட்ட போதும் அவ் அறிக்கைகள் இறுதி அறிக்கையாக தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீளாய்வு அறிக்கை தொடர்பாக அவ்வப்பொது ஆணைக்குழுவில் எழுந்த கருத்துகள் மற்றும் முன்மொழிவுகள் மீது முன் நடவடிக்கைக்காக அவ் அறிக்கைக்குரிய இறுதி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை. | |
| (இ) | ஆணைக்குழுவினால் இறுதி அறிக்கை வெளியிடப்பட்ட கொள்கைகள் மற்றும் மீளாய்வு அறிக்கைகளில் உள்ளடங்கிய பரிந்துரைகளை அந்த அந்த நிறுவங்களினால் வினைத்திறனாக பயன்படுத்துவதாயென பின்னூட்டல் செயல்முறை ஒன்று நிறுவனத்தினால் தயாரிக்கப்ட்டிருக்கவில்லை. | நிறுவனத்தால் மேற்கொள்ளும் விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களில் மீளாய்வு செயன்முறையை நாளாதுவரையாக்க மற்றும் நிலவிய பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு வழங்குதல் மற்றும் குறித்த மீளாய்வை மேற்கொண்ட நிறுவனங்கள் வழங்கிய பரிந்துரைகளை செயற்படுத்தல் மேற்பார்வை செய்வதற்காக முறைமையொன்றை ஆரம்பிக்க 2021 ஆண்டில் ஆணைக்குழு உப குழுவொன்று நிறுவப்பட்டது. அதன் பிரகாரம் ஆணைக்குழு உப குழுவின் பரிந்துரையான இந்த செயலை புதிய தலைவர் ஒருவரை நியமித்த பின்னர் வழங்கப்படும் பரிந்துரை மீது மேற்கொள்ளவுள்ளது. | சட்டத்தின் நோக்கத்தை அடைந்த கொள்ள மிகவும் பொருத்தமான முறைமையொனறை தயாரித்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

-----------------------------------------------------------------------

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

-----------------------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய | கணக்கறிக்கை பெப்ரவரி | சுற்றறிக்கைகளுக்கு |

| | | |
|---|---|---|
| 1/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டிருக்கும் செயற்பாட்டு கைநூளின் 6.3 பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் கணக்கறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் 03 மாதங்களும் 15 நாட்கள் தாமதமாகி 2022 ஜுன் 15 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 28 ஆம் திகதிக்கு முன் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கும் நோக்கத்தில் 2022 ஜனவரி மாதமளவில் தயாரிக்கப்பட்டு, 2022 பெப்ரவரி 22 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவிற்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அக் குழுவின் அங்கத்துவம் வகிக்கும் ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் அப் பதவியிலிருந்து 2022 பெப்ரவரி மாதத்தில் இராஜினாமா செய்திருந்ததால் மற்றும் மேலும் ஒரு அங்கத்தவர் வெளிநாடு சென்றிருந்ததால், அங்கீகாரம் பெற காலம் எடுத்தது. | இணங்க உரிய தினத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED 12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம், கணக்காண்டு நிறைவடைந்து 150 நாட்களுக்கு பின்னர் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 ஆண்டுகளிற்குரிய வருடாந்த அறிக்கை 2022.06.16 ஆந் திகதிய கடிதம் மூலம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பதற்காக வரிசை அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. அமைச்சின் அங்கீகாரத்தை பெற்று முன் நடவடிக்கை எடுப்போம். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் வருடாந்த அறிக்கையை உரிய தினத்திற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |